**இந்திய வானிலைத் துறை & தமிழ்நாடு வேளாண்மைப் பல்கலை கழகம்**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம், கோவை**

# மண்டல வாரியான வானிலை சார்ந்த வேளாண் அறிக்கை – 28.09.2016

## மாநிலத்தின் கடந்தவாரவானிலை

தமிழகத்தின் பெரும்பாலான பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 33°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 22°செ முதல் 29°செ ஆகவும் பதிவானது. கொடைக்கானல் மற்றும் உதகமண்டலம் பகுதிகளில் பகல்நேர வெப்பநிலை 16°செ முதல் 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 9°செ முதல் 12°செ ஆகவும் பதிவானது. பொதுவாக தமிழ்நாட்டில் ஆங்காங்கே மழை பெறப்பட்டது.

## வானிலை முன்னறிவிப்பு மற்றும் அறிவுரைகள் (28.09.2016 முதல் 02.10.2016)

### 1. மேற்கு மண்டலம்

வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. அதிகபட்ச வெப்பநிலை 33°செ முதல் 34°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 22°செ முதல் 23°செ ஆகவும், காலைநேர காற்றின் ஈரப்பதம் 70 முதல் 84 சதவிகிதமாகவும், மாலைநேரகாற்றின் ஈரப்பதம் 60 முதல் 65 சதவிகிதமாகவும் பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் மணிக்கு 20 முதல் 22 கி.மீ அளவுக்கு பெரும்பாலும் தென் மேற்கு திசையிலிருந்து வீசக்கூடும்.

**வேளாண் அறிவுரை**

- எதிர்பார்க்கபடும் மழையினைப் பயன்படுத்திகொள்ளும் வகையில் கம்பு, சோளம், ராகி போன்ற சிறுகுறு தானியப் பயிர்களை மானாவாரியாக கரிசல் மற்றும் செம்மண் பூமியில் முன்பருவ விதைப்பு செய்யவும்.
- சம்பா பருவ விதைப்பு முடியும் தருணமாதலால், குறுகியகால நெல் இரகங்களின் முளைத்த விதைகளை சேற்று உழவு செய்த நெல் வயலில் விதைக்கவும்.
- காற்றின் வேகம் அதிகமாக எதிர்பார்க்கப்படுவதால் முன்பட்ட மற்றும் நடுபட்டங்களில் பயிரிடப்பட்ட கரும்பிற்கு விட்டம் கட்டவும், மேலும் ஐந்து மாதங்களுக்கு மேலுள்ள வாழை மரங்களுக்கு முட்டு கொடுக்கவும்.
- தற்போதைய வானிலை கறவை மாடுகளில் மடுவீக்க நோய் உருவாக்கும் காரணிகளை அதிகப்படுத்தும் என்பதால் பால் கறப்பதற்கு முன்பும் கறந்த பின்பும், 1 சதவீத பொட்டாசியம் பர்மாங்கனேட் கரைசலைக் கொண்டு கழுவவும்

### 2. காவிரி டெல்டா மண்டலம்

காவேரி பாசன பகுதிக்கு உட்பட்ட மாவட்டங்களான தஞ்சாவூர், நாகப்பட்டினம், திருவாரூர், கரூர், பெரம்பலூர் அரியலூர் மற்றும் திருச்சி ஆகிய இடங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல் நேர வெப்பநிலையானது 36°செ முதல் 37°செ ஆகவும், குறைந்தபட்ச வெப்பநிலை 27°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 38 முதல் 76 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. சராசரியாக காற்றின் வேகம் 7 முதல் 20 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- அடுத்த சில நாட்களுக்கு லேசான முதல் மிதமான மழை எதிர்பார்க்கப்படுவதால் தாளடி நடவு வயலை தயார் செய்யவும்.
- பின் சம்பா பருவத்தில் நேரடி நெல் விதைப்பில் விதைப்பதற்கு முன் விதைகளை சூடோமோனாஸ் என்ற எதிர் உயிரியினை ஒரு கிலோ விதைக்கு 10 கிராம் என்ற அளவில் விதை நேர்த்தி செய்து விதைக்கவும். இதனால் விதைகளின் முளைப்புத்திறன் மற்றும் வீரிய தன்மை அதிகரிக்கும். விதைகள் மூலம் பரவக்கூடிய நோய் கிருமிகள் அழிந்து விடும்.
- பின் சம்பா பருவ நெல் நடவு செய்யும் விவசாயிகள் 1 ஏக்கருக்கு 200 கிலோ ஜிப்சம், 10 கிலோ ஜிங்க்சல்பேட், 30 கிலோ யூரியா, 40 கிலோ டிஏபி மற்றும் 10 கிலோ பொட்டாஷ் ஆகிய உரங்களை அடியுரமாக இடவேண்டும். பின் சம்பா நடவிற்கு முன் ஏக்கருக்கு 100 கிலோ வேப்பம்புண்ணாக்கு இட்டு பூச்சி மற்றும் நூற்புழுக்களை கட்டுப்படுத்தலாம்.
- சம்பா நெற்பயிரில் இலைச்சிலந்தியின் தாக்குதல் பரவலாக தென்படுகிறது. இதனைக் கட்டுப்படுத்த டைக்கோபால் 600 மி.லி. / ஏக்கர் அல்லது நனையும் கந்தகத்தூள் 400 கிராம் / ஏக்கர் என்ற அளவில் 200 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளிக்கவும்.
- தாளடி பருவத்திற்கு ஆடுதுறை 38, ஆடுதுறை 46, ஆடுதுறை 49, மேம்படுத்தப்பட்ட வெள்ளை பொன்னி, திருச்சி 3, மற்றும் டிகேஎம் 13 இரகங்களும் சாகுபடி செய்ய சிபாரிசு செய்யப்படுகிறது.

**தெற்கு மண்டலம் -1**

தெற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான திருநெல்வேலி, விருதுநகர், தூத்துக்குடி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். விருதுநகர் மாவட்டத்தில் வறண்ட வானிலையே எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலையானது 36°செ முதல் 39°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 24°செ முதல் 28°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேர காற்றின் ஈரப்பதம் 35 முதல் 77 சதவிகிதமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 4 கி.மீ முதல் 26 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- மானாவாரியில் முன்பருவ விதைப்பிற்கு பருத்தி இரகங்களுக்கு விதையளவு15 கிலோ/எக்டர் மற்றும் பயிர் இடைவெளி 45 x 15 செ.மீ. (KC3).
- மானாவாரி புழுதி விதைப்பில் முளைப்புத்திறனை மேம்படுத்த விதைகளை கடினப்படுத்தி விதைக்கவும். பருத்தி விதைகளை புங்கம் இலைச்சாறில் (1%) விதைகளை 8 மணி நேரம் ஊறவைத்து முன்பு இருந்த ஈரப்பதத்திற்கு நிழலில் உலர்த்தி விதைக்கவும்.
- மானாவாரியில் முன்பருவ விதைப்பிற்கு சோளப் பயிர்களுக்கு விதையளவு22.5 கிலோ/ எக்டர், மற்றும் பயிர் இடைவெளி 45 x 15 செ.மீ.
- விதைகளை கடினப்படுத்த 2 சத பொட்டாசியம் டை ஹைட்ரஜன் பாஸ்பேட் அல்லது 2 சத பொட்டாசியம் குளோரைடு கரைசலில் 6 மணி நேரம் ஊறவைத்து பின்ப முன்பு இருந்த ஈரப்பதத்திற்கு நிழலில் உலர்த்தி விதைக்கவும். ஊறவைப்பதற்கு விதைகளின் கொள்ளளவிற்கு சரிசமமான அளவு கரைசலை பயன்படுத்தவும்.
- வரும் தினங்களில் அதிக வெப்பம் மற்றும் ஈரப்பதம் எதிர்பார்க்கப்படுவதால் மிளகாயில் நாற்றழுகல் நோய் ஏற்பட வாய்ப்புள்ளதால் ஆகையால் காப்பர் ஆக்ஸி குளோரைடு 2.5 கிராம் ஒரு லிட்டர் தண்ணீருடன் கலந்து 15 நாட்கள் இடைவெளியில் நாற்றங்கால் நனைக்கவும். நூற்புழு மற்றும் சாறு உறிஞ்சும் பூச்சியின் தாக்குதலை கட்டுப்படுத்த கார்போபியூரான் 3 G 10 கிராம் ஒரு சதுர மீட்டருக்கு இடவும்.மூ
- வரும் தினங்களில் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் வாழைக்கு நீர்ப்பாய்ச்சவும். அதிக காற்றின் வேகத்திலிருந்து பாதுகாக்க முட்டு கொடுக்கவும்.
- வரும் தினங்களில் வறண்ட வானிலை எதிர்பார்க்கப்படுவதால் நெல்லுக்கு நீர்ப்பாய்ச்சவும்.

**தெற்கு மண்டலம் -2**

வரும் நாட்களில் மதுரை, சிவகங்கை, தேனி, புதுக்கோட்டை, திண்டுக்கல், இராமநாதபுரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும்.

வரும் நாட்களில் தேனி மாவட்டத்தில் மட்டும் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. மற்ற மாவட்டங்களில் வறண்ட வானிலையே நிலவுகிறது. பகல்நேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் மட்டும் 25°செஆகவும், மற்ற மாவட்டங்களில் 38°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலையானது தேனி மாாவட்டத்தில் மட்டும் 21°செ ஆகவும், மற்ற மாவட்டங்களில் 26°செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காலைநேரகாற்றின் ஈரப்பதம் 40 முதல் 50 சதவிகிமாகவும் பதிவாகவாய்ப்புள்ளது. காற்றின் வேகம் 18 கி.மீ வேகத்தில் வீசும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- கடந்த சில நாட்களாக பெய்த மழையைப் பயன்படுத்தி சம்பா வயல்களை தயார் செய்யவும்.
- எதிர்பார்க்கப்படும் மழையினை பயன்படுத்தி சம்பா நெல் நாற்றாங்காலில் மத்திய கால வயதுடைய நெல் இரக விதைகளை விதைக்கவும்.
- தோட்டக்கலைப் பயிர்களில் வேர்ப்பகுதியில் ஈரப்பத்தைப் பாதுகாக்க தென்னை நார்கழிவுகளை இடவும்.
- பகல் பொழுதில் காணப்படும் அதிக வெப்பத்தின் காரணமாக ஆடு, மாடுகளில் செயற்கை கருத்தரிப்பினை காலையில் 9 மணிக்குள்ளும் அல்லது மாலை 4 மணிக்கு பிறகும் சேய்ய வேண்டும்.

**4. மலைப்பிரதேச மண்டலம்**

வரும் நாட்களில் மலைப்பிரதேச மண்டலமான நீலகிரி மாவட்டத்தில் வானம் மேகமூட்டத்துடன் காணப்படும். அடுத்த ஐந்து நாட்களுக்கு இலோசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 17°செ முதல் 19°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 10°செ முதல் 11 °செ ஆகவும் பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 80 முதல் 92 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்று மணிக்கு 32 கி.மீ வேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

- மாவட்டத்தில் 28 மற்றும் 29 ஆம் தேதிகளில் மிதமான மழை வரலாம் என எதிர் பார்க்கப்படுகிறது.
- கோஸ் மற்றும் காலிபிளவரில் தலை அழுகலை தடுக்க, காப்பர் ஆக்ஸி குளோரைடு 2 கிராம் / லிட்டர் தெளிக்கவும்.

**5.வடமேற்கு மண்டலம்**

வரும் நாட்களில் வடமேற்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சேலம், நாமக்கல், தர்மபுரி மற்றும் கிருஷ்ணகிரி மாவட்டங்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். வரும் நாட்களில் இலேசான மழை எதிர்பார்க்கப்படுகிறது. பகல்நேர வெப்பநிலை 37°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை 25°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காற்றின் ஈரப்பதம் 38 முதல் 76 சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது.காற்று மணிக்கு் 11 முதல் 16 கி.மீவேகத்திலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

**வேளாண் அறிவுரை**

கோழிப்பண்ணையாளர்களுக்கு/ (கா.தீ.ப.ம.த.உ.ஆ, நாமக்கல்)

1. 28.09.2016 முதல் 30.09.2016 வரையிலான மூன்று நாட்களுக்கு வானம் பொதுவாக மேகமூட்டத்துடன் காணப்படும். சில இடங்களில் லேசான மழை இருக்கும். வெப்பநிலை அதிகபட்சம் 34.0°செ.(93.2°பா)-ம் குறைந்தபட்சம் 24.0°செ.(75.2°பா)-ம் நிலவும். காற்றின் வேகம் மணிக்கு சுமார் 10கி.மீ. என்ற அளவில் பெரும்பாலும் மேற்கிலிருந்து வீசும். காற்றின் ஈரப்பதம் 60 - 80%-ஆக நிலவும்.

2. தென்மேற்கு பருவமழைக்காலம் தொடர்கிறது. அதன் தாக்கம் தற்போது தமிழகத்தின் மீதும் காணப்படுவதால், மழைக்கான வாய்ப்பும், பகல் மற்றும் இரவு வெப்ப அளவுகள் குறைந்து, காற்றின் வேகம் கூடுதலான வானிலை நிலவும். இதன் காரணமாக கோழிகளில் உற்பத்திக்கான சாதகமான சூழ்நிலை நிலவும். புதிய வரவு மக்காச்சோளம் மற்றும் இதர தீவன பொருட்களின் கொள்முதல் செய்யும்போது, அவற்றின் ஊட்டச்சத்துக்கள் மற்றும் பூஞ்சானங்களின் அளவுகள் ஆகியவற்றைக் கொண்டு மேற்கொள்ளப்படவேண்டும். ஏனெனில், அதிக அளவு பூஞ்சான நச்சுக்கள், கோழிகளில் நோய் எதிர்ப்புச் சக்தியினைக் குறைத்து, நோய்களுக்கு வழி வகுத்துவிடும்.

வேளாண் அறிவியல் நிலையம், நாமக்கல்/

3. புரட்டாசி பட்டத்தில் பயறு வகைப் பயிர்களை சாகுபடி செய்தால் நல்ல மகசூலைப் பெறலாம். குறுகிய வயதுடைய (60-65 நாட்கள்) உளுந்து இரகங்களான கோ-6, வம்பன்-6,8, பாசிபயறு இரகமான கோ-8 (60 நாட்கள்), துவரை இரகங்கள் கோ-7(125 நாட்கள்), வம்பன் (வி.பி.என்)-3 (105 நாட்கள்) போன்றவற்றைத் தேர்வு செய்யலாம். ஒரு ஏக்கருக்கு தேவையான 1 கிலோ விதையுடன் 4 கிராம் *டிரைக்கோ டெர்மா விரிடி* அல்லது 10 கிராம் சூடோமோனாஸ் ஃப்ளூரசன்ஸ் கலந்து விதைப்பு செய்யவும்.

### *6. வடகிழக்கு மண்டலம்*

*அடுத்து வரும் ஐந்து நாட்களிலும் வடகிழக்கு மண்டலத்திற்கு உட்பட்ட மாவட்டங்களான சென்னை, காஞ்சிபுரம், திருவண்ணாமலை, திருவள்ளூர், கடலூர், வேலூர், விழுப்புரம் ஆகிய மாவட்டங்களில் வானம் பெரும்பாலான மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை **34**°செ முதல் **37**°செ ஆகவும், இரவுநேர வெப்பநிலை **25**°செ முதல் **28**°செ ஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலைநேர காற்றின் ஈரப்பதம் **50** மற்றும் **86** சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது. காற்றின் வேகம் **3-10** கி.மீவரையிலும் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

### *வேளாண் அறிவுரை*

- *அடுத்த நான்கு நாட்களுக்கு இலேசான முதல் மிதமான மழை பெய்ய வாய்ப்புள்ளது.*
- *உழவர்கள் தங்களுடைய ஆடு மற்றும் மாடுகளுக்கு அருகமையில் உள்ள கால்நடை மருத்துவமனையை அணுகி கோமாரி நோய்க்கான தடுப்பூசி போட்டுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கிறோம்.*
- *மழைக்காலம் ஆரம்பமாவதற்கு முன்பாக மாடுகளுக்கு சப்பை நோய் மற்றும் தொண்டை அடைப்பான் நோய்க்கான தடுப்பூசி அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.*
- *கால்நடைகளை ஏரி மற்றும் குளங்களில் உள்ள புற்களை மேயாமல் பார்த்துக்கோள்வதன் மூலம் தட்டைப் புழுக்களின் தாக்கத்தினை கட்டுப்படுத்தலாம்.*
- *செம்மறி ஆடு மற்றும் வெள்ளாடுகளுக்கு கால்நடை மருத்துவரின் பரிந்துரைப்படி குடற்புழு நீக்க மருந்தினை அளிக்குமாறு கேட்டுக்கொள்கிறோம்.*
- *உழவர்கள் தங்களுடைய கறவை மாடுகளின் மடியை நன்றாக கழுவி மற்றும் உலர்த்தி பால்கறக்கவும் மேலும் பால் கறந்த பின்பு தூசி அதிகமுள்ள உலர்தீவனம் அளிப்பதை தவிர்ப்பதன் மூலம் மடிவீக்க நோய் தாக்கத்திலிருந்து பாதுகாக்கலாம்.*

### *7.அதிக மழை பெறும் மண்டலம்*

*வரும் நாட்களில் வானம் பெரும்பாலும் மேகமூட்டத்துடன் காணப்படும். பகல்நேர வெப்பநிலை **30**°செ ஆகவும் இரவுநேர வெப்பநிலை **24**°செஆகவும் நிலவ வாய்ப்புள்ளது. காலை மற்றும் மாலை நேரகாற்றின் ஈரப்பதம் **75** முதல் **82** சதவிகிதமாக பதிவாக வாய்ப்புள்ளது காற்றின் வேகம் மணிக்கு **35** கி.மீவேகத்தில் வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகிறது.*

**வேளாண் அறிவுரை**

- *காற்றின் வேகம் அதிகமாக இருப்பதால் வாழை மரங்களுக்கு மூங்கில் கம்புகளால் முட்டு கொடுக்க வேண்டும*
- *வாழையில் வாடல் நோயைக் கட்டுப்படுத்த, நோய் பாதித்த மரங்களை வெட்டி அழிக்க வேண்டும். பின் சுண்ணாம்பு 1-2 கிலோ/ குழிக்கு இடவும்.*
- *தென்னை மரத்தில் 1.8 மீ சுற்றளவில் 10 செ.மீ உயரத்தில் தென்னை நார் கழிவுகளை இடவும்*
- *வளரும் மிளகு கொடிகளை தாங்கும் மரங்களுடன் கட்டிவிடவும்.*
- *நெல் வயல்களில் 5 செ.மீ உயரத்திற்கு நீர் பாய்ச்ச வேண்டும்.*
- *அன்னாசி வயல்களில் மூடாக்கு இடுவதன் மூலம் மண்ஈரப்பதம் வீணாகாமல் தடுக்கலாம்.*

**பேராசிரியர் மற்றும் தலைவர்,**
**வேளாண் காலநிலை ஆராய்ச்சி மையம்,**
**த.நா.வே.ப.கழகம்,கோவை.**